# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2313/32 - 2023 ජනවාරි මස 04 වැනි බදාදා - 2023.01.04

*2313/32 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் காலப்பகுதியினுள் அரசாங்கத்திற்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்கு உரித்தான யாதேனும் அசையா அல்லது அசையும் ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமைகின்ற விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கலாக அமைகின்ற விதத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பணிப்புகள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ. (4) (அ) உட்பந்தியின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற, அரசாங்கத்திற்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது சபைகளுக்கு அல்லது அதிகார சபைகளுக்கு அல்லது அரச கம்பனிகளுக்கு உரித்தான யாதேனும் அசையா அல்லது அசையும் ஆதனத்தை தேர்தலொன்றின்போது கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்கப்படுத்தலுக்கு காரணமாக அமைகின்ற விதத்தில் அன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமைகின்ற விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்குத் தடங்கலாக அமைகின்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக கீழ்க்காணும் பணிப்புகள் இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றன.

நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். பீ. திவாரத்ன,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

எம். எம். மொஹமட்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

கே. பீ. பீ. பத்திரண,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பீ. எஸ். எம். சார்ள்ஸ்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,*
*2023, சனவரி 04.*


1A - G 0000 — 106 (2023/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"தேர்தல் காலப்பகுதியினுள், அரசாங்கத்திற்கு அல்லது யாதேனுமோர் அரச கூட்டுத்தாபனத்திற்கு அல்லது அரச அதிகார சபையொன்றுக்கு அல்லது அரசுடைமைக் கம்பனியொன்றுக்கு உரித்தான யாதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை" யாதேனுமோர் அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும், வேட்பாளரை ஊக்கப்படுத்தும் அல்லது தடுக்கும் நோக்கத்திற்காக யாதேனுமோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு பயன்படுத்துவதைத் தடைசெய்யும் தத்துவம், இலங்கையின் அரசியலமைப்பின் 104 ஆ (4) (அ) உட்பந்திக்கமைய தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாகும். அதேபோல், அரசியலமைப்பின் 104 ஆ. (4) (அ) உட்பந்தியின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படுகின்ற மேலே சொல்லப்பட்ட பணிப்புகளை அமுல்படுத்துவதற்கு அவ்வுறுப்புரையின் (ஆ) உட்பந்திக்கமைய அரசுடைமையான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற அலுவலர்கள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர். ஆகையால் அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களும் இப்பணிப்புகளுக்கு அமைய செயலாற்றுதல் வேண்டும். அதேபோல், தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து அரச அலுவலர்களும் இப்பணிப்புக்களுக்கு அமைய செயலாற்றுவதையிட்டு தாபனத் தலைவர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இப்பணிப்புகள் அரசாங்க அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச அதிகார சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள் முதலான அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அரச கம்பனிகளுக்கும் செயல்வலுப்பெறுவதாக இருக்கும்.

## 2. அலுவலர்கள்

2.1 அனைத்து அரச அலுவலர்களினதும் திறமை, அறிவு, அவர்களின் காலநேரம் என்பனவும் அரச ஆதனமாக கருதப்படுகிறது. அரசியல் உரிமைகளுக்கான உரித்துடைய அரச அலுவலரொருவராயினும் அலுவலகத்தில் அல்லது முறைப்படி விடுமுறை பெற்றிராத பட்சத்தில், அலுவலகத்திற்கு வெளியிலேனும் அரசியல் ரீதியான ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகாது. அரசியல் உரிமைகளுக்கான உரித்துடையவர்களல்லாத அலுவலர்கள் விடுமுறை பெற்றுக்கொண்டேனும் அரசியல் கருமங்களில் ஈடுபடுதலாகாது.

2.2 எந்தவோர் அலுவலருக்கும் அல்லது ஊழியருக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்கள் அதாவது வாகனங்கள், பிரச்சார சாதனங்கள், அச்சீட்டுப் பொறிகள், நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள், ஊடக சாதனங்கள், தொலைபேசி வசதிகள், எழுதுகருவிகள், சுற்றுலா விடுதிகள் முதலான அரசு வசமுள்ள எதனையும் அல்லது அரச ஊழியரெவரையும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் உரிமை அல்லது அரசு வசமுள்ள எதனையும் பயன்படுத்தும் உரிமை கிடையாது.

2.3 அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் உரிய முறைப்படி மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றல்கள் உள்ளிட்ட இக்காலப்பகுதியினுள் அரச நிறுவனங்களில் எவ்விதமான ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளை தேர்தல் ஆணைக்குழுவின் முன் அனுமதியின்றி மேற்கொள்ளலாகாது. எவ்வாறாயினும், தேர்தல் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்புகள்/பதவி உயர்வுகளோடு தொடர்புடைய நாடுதழுவிய வேலைத்திட்டமொன்றை அல்லது உள்ளக பதவியுயர்வு வேலைத்திட்டமொன்றை ஒத்திவைக்காமல் செயற்படுத்த வேண்டிய தேவை இருப்பதாக அமைச்சுச் செயலாளர்கள் அல்லது தாபனத் தலைவர்கள் கருதுகின்றவிடத்தும், தீவு முழுவதற்கும் பாதிப்புச் செலுத்தக்கூடிய விதத்தில் அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/பதவி உயர்வுகள் முறைப்படியாகவும் அரசியல் தலையீடுகள் இன்றியும் மேற்கொள்ளப்படுவதாக உரிய அதிகாரிகளுக்கு உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றவிடத்தும் அதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் ஒருப்பாடு வழங்கப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவுக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து அதற்கான எழுத்திலான அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

2.4 துப்புரவேற்பாடு, சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளின் தடங்கல்களைத் தவிர்ப்பதற்கும் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கும் பிரதேச மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் அரச சேவைக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதாயின், அத்தகைய ஆட்சேர்ப்புகளும்கூட தேர்தல் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதோடு, எந்தவோர் அரசியல் தலையீடுமின்றி வெளிப்படைத்தன்மையுடன் அத்தகைய கருமங்களை மேற்கொள்ளும் பொறுப்பு உரிய அலுவலர்களைச் சாரும்.

2.5 தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரதேசங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகின்ற அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களினதும் பொதுவான இடமாற்றல்கள், பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின்/சபைகளின் அலுவலர்களாக இருப்பினும் தேர்தல் காலப்பகுதியினுள் இடமாற்றம் செய்யப்படுமிடத்து அரசியல் காரணங்களின் பேரில் அத்தகைய இடமாற்றம் செய்யப்படலாகாதென்பதோடு, அவ்வாறு

*இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்காத விதத்தில் குறித்த இடமாற்றல்களை வழங்குவது அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். முறைப்படியான ஒழுக்காற்றுக் கட்டளைக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றல்களுக்கு இக்கட்டளை செயல்வலுப்பெறாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவையின் தேவையின் பேரில் இடமாற்றல்களை மேற்கொள்ள வேண்டியதாக இருப்பின், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அது குறித்து அறிவித்து அதற்கான முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*2.6* *அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவரல்லாத அரச அலுவலரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்கொன்றை அல்லது வேறு கணக்கொன்றைப் பயன்படுத்தி யாதேனுமோர் அரசியற் கட்சியை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு அல்லது பாதிப்பினை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற யாதேனுமொரு பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்துகையை மேற்கொள்வது ஒரு குற்றமாகும். அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய அரச அலுவலரொருவராயிருப்பினும், அத்தகைய பிரச்சாரங்களையும் வெளிப்படுத்துகைகளையும் அரச வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளலாகாது என்பதோடு, தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்குகள் மூலமாயினும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள், தவறான தகவல்கள், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் என்பவற்றை பரப்பீடுசெய்வதற்கு அல்லது பகிரங்கப்படுத்துவதற்கு அவகாசமளித்தல் ஒரு குற்றமாகும்.*

*2.7* *தேர்தலோடு தொடர்புடைய அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கென தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு பணிப்பு அல்லது பணிப்புகள் மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தகவல்கள் அல்லது முறைப்பாடுகள் தொடர்பில் மேலும் ஆராய்வது அவசியமென்று தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கின்றவிடத்து, அதற்குத் தேவையான அச்சு அல்லது இலத்திரனியல் ஆவணங்கள், கலந்துரையாடல் குறிப்புகள், அறிக்கைகள், ஆட்சேர்ப்புக்கள் அல்லது நியமனங்கள் வழங்குவதோடு தொடர்புடைய அறிக்கைகள் முதலிய தகவல்களை ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவருக்கு வழங்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு அவ்வாவணங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள யாதேனும் பணிப்பு அல்லது பணிப்புகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்று தொடர்பில் மேலும் ஆராய்வதற்கு வாய்மொழிமூல அல்லது எழுத்துமூல வெளிப்படுத்துகைகளை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலரொருவர் கட்டளையிடுகின்றவிடத்து, அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வெளிப்படுத்துகைகளை வழங்குவதற்கு அவ்விடயங்களோடு தொடர்புடைய அரச அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர்கள் கடப்பாடுடையவர்களாவர்.*

*2.8* *தேர்தலோடு தொடர்புடைய அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்தோடு சம்பந்தப்பட்ட பணிப்புகளை மீறியமை தொடர்பான விடயங்கள் குறித்து விசாரிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு எவரேனும் அரச அலுவலருக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளவிடத்து, அதற்காக வருகை தந்து தேவையான அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்துவதற்கும் தேவைப்படக்கூடிய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிப்பதற்கும் அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்ட அரச அலுவலர் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர்கள் கடப்பாடுடையவர்களாவர்.*

*2.9* *அரச அலுவலர்கள் அஞ்சல் மூல வாக்களிப்பின்போது உரிய வாக்குச்சீட்டை அல்லது அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டை வெளிக்காட்டுவதும் அதனை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பளித்தலும், வாக்கெடுப்பு நிலையத்தை புகைப்படம் எடுத்தலும் அல்லது அத்தகைய புகைப்படக் காட்சிகளை பகிரங்க ஊடகங்களுக்கு வெளியிடுதலும் அல்லது சமூக ஊடக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்தலும் ஒரு குற்றமாகும்.*

**3. வைபவங்கள், நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள்**

*3.1* *வைபவங்கள்*

*தேர்தல் காலப்பகுதியினுள் அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு அடிக்கல் நாட்டு விழாக்கள், அங்குரார்ப்பண நிகழ்வுகள், மக்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் போன்ற வைபவங்கள் அரசியல்வாதிகளின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புபட்ட பலதரப்பட்ட கருத்தியல்கள் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதாலும், இத்தகைய சந்தர்ப்பங்கள் வைபவ ரீதியாக நடாத்தப்படுவதனூடாக யாதேனுமொரு கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்கப்படுத்தப்படுதல் அல்லது வேறொரு கட்சிக்கு/ குழுவுக்கு/ வேட்பாளருக்கு பாதிப்பு ஏற்படக் கூடுமாதலால், தேர்தல் காலப்பகுதியினுள் இத்தகைய வைபவங்களையும் கருமங்களையும் ஒழுங்குசெய்வதையும் நடாத்துவதையும் தவிர்த்தல் வேண்டும். தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியாவதற்கு முந்திய நாள் நிச்சயிக்கப்பட்ட அத்தகைய வைபவங்களை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்க வாய்ப்பில்லாதவிடத்து, தேர்தல் ஆணைக்குழுவுக்கு அது தொடர்பாக*

அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். யாதேனுமொரு விதத்தில் அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு இத்தகைய வைபவங்கள் நடாத்தப்படுமாயின், இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் யாதேனும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களின் ஊக்கப்படுத்தல் இடம்பெறுமாயின் அல்லது பாதிப்பு ஏற்படுத்தப்படுமாயின், வைபவத்தை ஒழுங்குசெய்த அலுவலர்கள் அது தொடர்பில் பொறுப்புக்கூறல் வேண்டும். அதேபோல் தேர்தல் காலப்பகுதியினுள் நடாத்தப்படுகின்ற இத்தகைய வைபவங்கள் தொடர்பாக கண்காணித்து அறிக்கைகளைப் பேணுவதற்காக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்குசெய்யும் அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இத்தகைய வைபவமொன்றின்போது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் யாதேனுமொரு வெளிப்படுத்துகையைச் செய்தல், செயற்பாடொன்றை மேற்கொள்ளல், கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பிரசுரங்கள்/விளம்பரங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. குறித்த வைபவங்களை ஒழுங்குசெய்கின்ற அல்லது நிதியீட்டம் செய்கின்ற பகிரங்க நிறுவனங்களும் அலுவலர்களும் அத்தகைய கருமங்களைத் தடுப்பதற்கு கடப்பாடுடையவர்களாவர்.

*3.2 நடமாடும் சேவைகளும் வர்த்தகக் கண்காட்சிகளும்*

மக்களுக்கு சேவைகளை வழங்கும் நோக்கோடு அரச நிதியையும் அரச ஆதனங்களையும் செலவிட்டு நடாத்தப்படுகின்ற இவ்வாறான நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றினூடாகவும் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போக்கு காணப்படுவதனால், இத்தேர்தல் காலப்பகுதியினுள் அத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்வதையும் நடாத்துவதையும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட முன்னர் நிச்சயிக்கப்பட்ட இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் ஆகியவற்றை இரத்துச் செய்வதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கான ஆற்றல் இல்லாதவிடத்து மாத்திரம் அவ்வாறான நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்து உரிய அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். யாதேனுமொரு விதத்தில் அரச நிதியைச் செலவிட்டு இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் போன்றவை ஒழுங்குசெய்யப்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு ஏற்படுமாயின், அது தொடர்பில் குறித்த பணியை ஒழுங்குசெய்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதேபோல், தேர்தல் காலப்பகுதியினுள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் போன்றவற்றை அவதானித்து அறிக்கைகளைப் பேணும் பொருட்டு உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்குசெய்யும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய எந்தவொரு நடமாடும் சேவை, வர்த்தகக் கண்காட்சி மற்றும் களியாட்டத்தில் அல்லது வேறொரு சந்தர்ப்பத்தில் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்கான அல்லது பாதிப்புக்கான யாதேனும் வெளிப்படுத்துகையை மேற்கொள்ளல், செயற்பாடுகளை மேற்கொள்ளல், கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பிரசுரங்கள்/விளம்பரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தல் அல்லது பகிர்ந்தளித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு குறித்த பணிகளை ஒழுங்குசெய்கின்ற அல்லது நிதியளிக்கின்ற அரச நிறுவனங்களும் அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாவர்.

**4. வசதிகளையும் கொடைகளையும் வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் விசேட கருத்திட்டங்களையும் அமுல்படுத்தல்**

*4.1* மக்களுக்கு வசதிகளைச் செய்துகொடுப்பதற்காக அல்லது நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால அல்லது நடுத்தரகால விசேட கருத்திட்டங்களை அல்லது வசதிகளை வழங்கும் தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை தேர்தல் காரணமாக இடைநிறுத்த முடியாதென்றபோதிலும், தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், அத்தகைய விசேட கருத்திட்டங்கள் அல்லது தொடர் நிகழ்ச்சித்திட்டங்களூடாக கட்சிகளை/குழுக்களை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்தல் அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்த இடமளிக்கப்படலாகாது.

*4.2* தேர்தல் காலப்பகுதியினுள் அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், காணிக் கச்சேரிகளை நடாத்துதல், அரச காணி உரித்துறுதிகள் அல்லது வீட்டுரிமைக் கையளிப்புக்கான உறுதிகளை வழங்குதல், பெருந்தோட்டக் கைத்தொழில்களுக்கான அல்லது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான மானிய உதவிகள், பசளைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருள்கள், சமையலறைச் சாதனங்கள், தளபாடங்கள், சுயதொழில் உபகரணங்கள், மிதி வண்டிகள், சூரியவலு மின் விளக்குகள், வீடுகளை நிருமாணிப்பதற்கான கட்டிடப் பொருள்கள் போன்றவற்றை பகிர்ந்தளிக்கும் கருத்திட்டங்கள், வீட்டுக் கடன் விநியோகித்தல்/நட்டஈட்டுத் தொகைகளை வழங்குதல் முதலான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதை இடைநிறுத்துதல் வேண்டும். இவ்வாறு இடைநிறுத்தப்படுவதன் காரணமாக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் தடங்கல் ஏற்படுமென புலப்படுமாயின், அது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அறிவுறுத்தல்களைப்

பெற்றுக்கொள்ளல் வேண்டும். யாதேனுமொரு விதத்தில் ஏலவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி வழங்கப்படுகின்ற இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுமாயின், அப்பணிகளை அவ்விடயப் பொறுப்பு அலுவலர்களின் பங்கேற்போடு மாத்திரம் எந்தவொரு கட்சி, குழு, வேட்பாளர் ஊக்கப்படுத்தல் அல்லது பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுத்தல் அப்பணிகளுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும்.

**05. அரச ஆதனங்களை வசமாகக் கொண்டிருக்கும் அரசாங்க, அரச நியதிச்சட்ட, கூட்டுத்தாபன, சபைத் தலைவர்களின் பொறுப்பு**

5.1 ஒவ்வோர் அரச நிறுவனத்தின், கூட்டுத்தாபனத்தின், நியதிச்சட்ட சபையின், அதிகார சபையின், சபையின், அரசாங்கத்திற்கு 50%க்கு கூடுதலான பங்குரிமையுள்ள நிறுவனமொன்றின் அரச வளங்களின் பொறுப்புக்கும் மேற்பார்வைக்கும் அலுவலரொருவர் வீதம் பெயர்குறித்தல் வேண்டும்.

5.2 அரச நிறுவனமொன்றுக்கு, கூட்டுத்தாபனமொன்றுக்கு, நியதிச்சட்ட நிறுவனமொன்றுக்கு, அதிகாரசபையொன்றுக்கு, சபையொன்றுக்கு, அரச கம்பனிகளுக்கு உரித்தான ஆதனங்களை, எந்தவோர் அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரின் ஊக்கப்படுத்தலுக்கு அல்லது பாதிப்புக்கு காரணமாக அமைகின்ற விதத்தில் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படலாகாது. நிறுவனமொன்றுக்குச் சொந்தமான அரச ஆதனங்களை அரசியல் கருமங்களுக்காக பயன்படுத்துவதைத் தடுப்பது குறித்த நிறுவனத் தலைவர்களின் ஒரு பொறுப்பாகும். இத்தகைய அரச ஆதனங்களை அரசியற் கட்சியின், சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளர்களின் ஊக்கப்படுத்தலுக்கு அல்லது பாதிப்புக்குக் காரணமாக அமைகின்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்குரிய ஏற்பாடுகள் இந்த ஒவ்வொரு நிறுவனத் தலைவர்களினாலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இப்பணிப்புகளை உரிய முறையில் அமுல்படுத்தாத அரச நிறுவனத் தலைவர்களுக்கெதிராக குறித்த பணிப்புகளை மீறல் தேர்தல் குற்றமொன்றாகக் கருதி செயலாற்றப்படும்.

**6. வாகனங்கள்**

6.1 அரசாங்கம் வசமுள்ள மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், கெப் வண்டிகள், பஸ் வண்டிகள் முதலான அனைத்து அரச வாகனங்களின் குழாமிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் அவ்வாகனங்களை யாதேனுமோர் அரசியல் கட்சியின், சுயேச்சைக் குழுவின், வேட்பாளரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படாத விதத்தில் தேர்தல் காலப்பகுதியினுள் வாகன குழாமைப் பராமரிப்பதையும் குறித்தொதுக்குவதையும் விசேட கவனத்துடன் மேற்கொள்ளல் வேண்டும். அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரசாங்கம் வசமுள்ள வாகனங்களும் (Assigned Vehicles) வேறு வெளித் தரப்புகளிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்று கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களும் (Hired Vehicles) இதிலடங்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதியினுள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned Vehicles) தவிர முக்கியமாக குழாம்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான (Pool Vehicles) ஓட்ட விவரக்குறிப்புகளும் ஏனைய வாகனங்களுக்கான ஓட்ட விவரக்குறிப்புகளும் முறைப்படியாக பேணப்பட வேண்டுமென்பதோடு, இந்த ஓட்ட விவரக்குறிப்புகளை பதவிநிலை அலுவலரொருவர் அன்றாடம் பரீட்சித்து குறித்த வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதில்லை என்பது தொடர்பில் திருப்தியடைதல் வேண்டும். கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டதாக போலியான ஓட்ட விவரக்குறிப்புகளை எழுதி அரச வாகனங்களை அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கும் அல்லது அத்தகைய சட்டமுரணான கருமங்களுக்கும் அரச வாகனங்கள் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதற்கு வகைகூறுதல் வேண்டும்.

6.2 சனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பிரிவுக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த வேறெந்த வாகனத்தையும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட தனித்துவமான பதிவிலக்கமின்றி ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதென்பதால், எந்தவோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் அவர்களின் பணியாட்குழு அங்கத்தவர்களுக்கும் அல்லது வேறு எவருக்கும் உரிய பதிவிலக்கமின்றி அரசாங்க அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால், அனைத்து திணைக்களங்களும் அரசாங்க நிறுவனங்களும் வசமுள்ள வாகனங்கள் திருத்த நிலைய இலக்கங்களைப் பயன்படுத்தி அல்லது போலியான இலக்கங்களைப் பயன்படுத்தி ஓட்டத்தில் ஈடுபடவில்லை என்பதை அமைச்சுச் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் வசமுள்ள வாகன குழாமிற்குப் பொறுப்பான அலுவலர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

6.3 அரசியல் பிரச்சாரப் பணிகளுக்காக விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அல்லது வேறு வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு அரசாங்கப் பணம் செலவிடப்படுவதில்லையென்பதை அனைத்து அமைச்சுச் செயலாளர்களும் தாபனத் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**7. அரச அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கம் வசமுள்ள ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் முதலியன.**

*7.1 அரச அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கம் வசமுள்ள ஏனைய கட்டிடங்கள், சுற்றுலா விடுதிகள் முதலியனவும் அரச வளங்களாகும். ஆதலால், அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை நடாத்துவதற்கு இக்கட்டிடங்களைப் பயன்படுத்தலாகாது. வழமையான காலப்பகுதியில் எந்தவோர் அரசியல் கட்சிக்கும்/ குழுவுக்கும்/ வேட்பாளர் ஒருவருக்கும் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளக்கூடிய கட்டிடங்களையும் மண்டபங்களையும் தேர்தல் காலப்பகுதியினுள் உரிய கட்டணத்தை அறவிட்டு எந்தவொரு கட்சிக்கும்/குழுவுக்கும்/வேட்பாளருக்கும் பாரபட்சமின்றி வழங்குவதற்கு இவ்வேற்பாடுகள் தடங்கலாக இருப்பதாகக் கருதப்படலாகாது. தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு, அரசாங்கம் வசமுள்ள சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும். அரசாங்கம் அல்லது அரச நிறுவனங்கள் வசமிருக்கும் சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் போன்றவை எந்தவோர் அரசியல்வாதிக்கும் அலுவலருக்கும் வேறொரு நபருக்கும் தேர்தல் காலப்பகுதிக்குள் முழுக் காலத்துக்குமென ஒதுக்கிக் கொடுக்கப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். அதேபோல், இத்தகைய இடங்களில் தங்கியிருக்கின்ற நபர்கள், அரசியற் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்கப்படுதலாகாது. அரசாங்கம் வசமிருக்கும் கட்டிடங்களிலும் அவை அமையப் பெற்றுள்ள காணிகளிலும் அரசியற் கட்சிகளினதும், வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பெரியளவிலான உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தவும் இடமளிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ வாய்ப்பளிக்கப்படுதலாகாது.*

*7.2 அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் வசமிருக்கும் விளையாட்டு மைதானங்கள் அல்லது வெற்றுக் காணிகள், மண்டபங்கள் அல்லது அத்தகைய வேறு கட்டிடங்கள் ஒவ்வோர் அரசியற் கட்சி/ சுயேச்சைக் குழு/ வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கான பிரச்சாரக் கூட்டங்களுக்காக குறித்தொதுக்கிக் கொடுக்கப்படும்போது எந்தவொரு கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு விசேட கவனிப்பு அல்லது முக்கியத்துவம் அல்லது கவனிப்புக் குறைவு ஏற்படத் தக்கவாறு குறித்தொதுக்கப்படலாகாது. அத்தகைய இடங்கள், கட்டிடங்கள் என்பவற்றைக் குறித்தொதுக்குதல் வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இடங்களை ஏனைய கட்சியொன்றிற்கு/குழுவொன்றுக்கு/வேட்பாளரொருவருக்கு பெற்றுக்கொள்ள முடியாதவாறு எந்தவொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு வேறு பணிகளுக்காக தொடர்ச்சியாக குறித்தொதுக்கி வைத்துக்கொள்ளப்படலாகாது.*

**8. பொதுவான விடயங்கள்**

*8.1 அரச ஆதனங்கள் குறிப்பாக அரசாங்க நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவை, கட்டிடங்கள், காணிகள் மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/ குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தப்பட எந்தவொரு வாய்ப்பும் வழங்கப்படலாகாது. தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசர கடமை அலுவல்களுக்காக அல்லது விசேட அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றல் முதலிய விடயங்களை முன்வைத்து கட்சிகள்/குழுக்கள்/ வேட்பாளர் ஊக்கப்படுத்தலை (அன்றேல் பாதிப்பை ஏற்படுத்துவதற்காக) அரசாங்க/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்தின்/ அரச நிறுவனங்கள் வசமிருக்கும் அல்லது வாடகைக்கு அமர்த்திய வாகனங்களை வேறு அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இணைத்தல் அல்லது விடுவித்தல் போன்ற சட்டரீதியற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்தவோர் அலுவலருக்கும் இடமளிக்கப்படுதலாகாது. அரசாங்க, மாகாண சபைகளின், உள்ளூர் அதிகார சபைகளின் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரச வங்கிகள், வேறு நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவோர் அரச நிறுவனமும் வசமுள்ள ஊடகப் பிரிவின் அலுவலர்களும் வாகனங்களும் கருவிகளும் எந்தவொரு கட்சியின்/குழுவின்/வேட்பாளரின் ஊக்கப்படுத்தும் கருமங்களுக்காக ஈடுபடுத்தலாகாது. பொதுவான நிலைமையின் கீழ் எந்தவோர் அரச நிறுவனமும் வசமிருக்கும் மேடைகள், சோடினைகள், உபகரணங்கள், வாகனங்கள், வானூர்திகள், ஹெலிகொப்டர்கள் போன்றவை வாடகை அடிப்படையில் வழங்கப்படுமாயின், தேர்தல் காலப்பகுதியினுள் அத்தகைய வாடகைக்கு வழங்கப்படல்கள் அனைத்து கட்சிகளுக்கும்/ குழுக்களும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.*

*8.2 அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது ஏதேனும் ஆண்டு நிறைவு/நினைவு தின வைபவங்கள் ஆகியவற்றுக்கான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் போன்ற ஊடகங்களூடாக விளம்பரங்களின் ஒலி/ஒளிபரப்பு/பிரசுரிப்பு மூலமாகவோ பிரச்சார விளம்பரப் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தல் மூலமோ எந்தவொரு கட்சி/குழு/வேட்பாளர் சார்பாகவும் ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளையோ பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையோ மேற்கொள்ளலாகாது.*

8.3 அனைத்து தனியார் கேபிள் தொலைக்காட்சி அலைவரிசைகள், தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள், கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் என்பன தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் சட்டங்களை மீறாத விதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டிநெறிகள், பணிப்புகள் மற்றும் அறிவுறுத்தல் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் நடந்துகொள்வதற்கு வகைகூறுதல் மேற்குறித்த தொடர்பாடல் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை வகிக்கின்ற ஊடக அமைச்சின் செயலாளரினதும், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தவிசாளர்/பணிப்பாளர் நாயகத்தினதும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

8.4 கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் அல்லது பாதிக்கும் விதத்தில் தெரு விளக்குக் கம்பங்கள், தொலைபேசிக் கம்பித் தூண்கள் என்பவற்றில் பதாகைகள், சுவரொட்டிகள், கொடிகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தல் மற்றும் ஏனைய சோடனைகள் என்பவற்றை மேற்கொள்வதைத் தடுப்பதைப் போலவே பெருந்தெருக்கள் மீதும் இரு மருங்கிலும் உள்ள பாதசாரிகள் மேடைகள் மீதும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் வர்ணப்பூச்சுக்களைப் பூசுதல் மூலம் அல்லது டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் பலகைகள் போன்ற முறையிலோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்குரிய அதிகார எல்லைக்குரிய குறித்த அரசாங்க ஆதனங்களின் உரித்துரிமை அல்லது நிருவாகம் உரித்தான அரச நிறுவனங்களின் தலைவர்களின்/மாகாண அல்லது பிரதேச தலைவர்களின் மற்றும் மாநகர முதல்வர்/தவிசாளர்/மாநகர ஆணையாளர்/ செயலாளர் மற்றும் அந்தந்த பிரிவுத் தலைவர்களின் பொறுப்பாகும். உள்ளூர் அதிகார சபை நிறுவனங்களுக்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் வாக்கெடுப்புக்குரிய அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள கடமைகளைத் தட்டிக்கழிப்பதும் ஏற்பாடுகளை மீறுவதாகக் கருதப்படல் வேண்டும்.

8.5 யாதேனுமோர் அமைச்சு, திணைக்களம் அல்லது அரச நிறுவனம் தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர் நிர்மாணித்துள்ள அல்லது காட்சிப்படுத்தி வருகின்ற கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்கப்படுத்தலுக்கு காரணமாக அமையக்கூடிய விதத்தில் பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள், சோடனைகள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதிலிருந்து அகற்றுவதற்கு அந்தந்த அரச நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தமது உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் பகிரங்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள், சோடனைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்களும் குறித்த நிறுவனங்களின் ஆணையாளர்களும் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

8.6 தேர்தலொன்றின்போது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் விதத்திலான இப்பணிப்பு, எத்தகைய தளர்த்தலுக்கும் இடமின்றி வலுவாக அமுல்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்துத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அமைச்சுச் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோல், அத்தகைய அனைத்து நிறுவனங்களின் அலுவலர்களும் இவ்வறிவுறுத்தல்களுக்கும் பணிப்புகளுக்கும் அமைவாக செயற்படுகின்றனரா என்பதை அமைச்சுச் செயலாளர்களும் நிறுவனங்களின் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அத்தியாவசியமாகும்.

8.7 தேர்தலோடு தொடர்புடைய அனைத்துச் சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்ட வலுவாக்கத்திற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104 ஆ. (2) உட்பந்தியில் காணப்படுகின்ற இக்குறிப்பீடு தொடர்பாக அரச அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுதல் அத்தியாவசியமாகும்.

8.8 இப்பணிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்களையும் அமைச்சர்களின் பணியாட்குழுவினரையும் அறிவுறுத்தும் பொறுப்பு உரிய அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுவதோடு, மாகாண சபைகளின் ஆளுநர்களை அறிவூட்டுதல் பிரதம செயலாளர் மற்றும் உரிய மாகாண சபை அமைச்சுச் செயலாளர்களின் பொறுப்பாகுமென்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

8.9 ஏற்புடைத்தாகுமிடத்து, ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு இப்பணிப்புகள் தொடர்பாக அறிவுறுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

8.10 அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களின் தலைவர்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்களாகவும் அல்லது கணக்கீட்டு அலுவலர்களாகவும் இருப்பதால், அரசாங்கம்

வசமிருக்கும் ஆதனங்களின் முறையற்ற துஷ்பிரயோகத்தைத் தடுப்பது குறித்த அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்ற ஒரு பொறுப்பாகும்.

8.11 உள்ளூர் அதிகார சபைகள், ஏனைய அரச அல்லது நியதிச்சட்ட சபைகள், அரச கம்பனிகளினால் குறித்த நிறுவனங்களுக்கு நியதிச்சட்ட அல்லது வேறு வகையில் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளைத் தட்டிக்கழிப்பதும் அத்துடன்/அல்லது செய்யாமலிருப்பதும் பணிப்புகளை மீறுவதாகக் கருதப்படும்.

8.12 இப்பணிப்புகளுக்கு இணங்கியொழுகாமை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104எஎ. ஆம் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய ஒரு குற்றமென்றும் குறிப்பிடப்படுகிறது.

இப்பணிப்புகளில் அரசாங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள கம்பனிகள் ஆகிய அனைத்து நிறுவனங்களும் 50% சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகள் அரசாங்கம் அல்லது அரச கம்பனிகள் வசமிருக்கும் நிறுவனங்களும் என்று பொருள்படும்.

அரசாங்க அலுவலர்களும் ஊழியர்களும் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் மேற்சொன்ன நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் ஏதேனுமோர் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுமான குடியரசிலிருந்து வேதனமொன்றையோ படியொன்றையோ பெறுகின்ற ஆட்கள் அனைவரும் என்று பொருள்படும்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட 2020.03.06 ஆந் திகதிய 2165/70 ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய 2172/2 ஆம் இலக்க, 2020.06.06 ஆந் திகதிய 2178/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.